செ.வெ.எண் : 543

17.9.12

# பத்திரிக்கை செய்தி

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திரு. ந. சுப்பிரமணியன் அவர்கள் தலைமையில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் துணைத் திட்ட பணிகளை ஆய்வு செய்ய, பல்வேறு செயலாக்க துறை தலைவர்களுடன் இன்று 17.09.12 காலை 11.00 மணிக்கு தலைமைச்செயலகத்தில் கூட்டம் நடைப்பெற்றது. இவ்வாய்வு கூட்டத்திற்கு, திரு.ஆ.சூ.ஜீவரத்தினம், செயலர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அவர்கள் வரவேற்புரை வழங்கினார்.

2012-13 ஆண்டில் ஆதி திராவிடர் துணைத்திட்டத்தின் கீழ் ரூ.6108.60 கோடியும் பழங்குடியினர் துணைத் திட்டத்தின் கீழ் ரூ.349.30 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள், சூலை – 12 வரையிலான காலத்தில் ஒவ்வொரு துறையிலும் மேற்க்கொள்ளப்பட்ட செலவினங்கள் குறித்து துறைவாரியாக ஆய்வு செய்தார். மேலும் 2011-12 ஆம் ஆண்டில் ஆதிதிராவிடர் மற்றும் துணைத் திட்டத்தின் கீழ் மேற்க்கொள்ளப்பட்ட திட்டப்பணிகள் மற்றும் ஒதுக்கப்பட்ட நிதியில் இலக்கினை முழுமையாக அடைந்ததை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பாராட்டினார்.

மேலும், ஆய்வு கூட்டத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒவ்வொரு துறைகளிலும் 2012-13 ம் ஆண்டில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் துணைத்திட்டன் கீழ் மேற்க்கொள்ளப்படவுள்ள திட்டங்கள் பற்றியும் மற்றும் அத்திட்டங்கள் அனைத்தும் இலக்கினை அடைய துரித நடவடிக்கைகள் எடுக்குமாறு துறை தலைவர்களை கேட்டுக்கொண்டார்.

இவ்வாய்வு கூட்டத்திற்கு வருகை தந்த கூடுதல் தலைமைச்செயலர், முதன்மைச் செயலர், செயலர் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9.